முதல்நிலை அறிக்கை

# இலங்கையில் மீள்நல்லிணக்கம் பற்றிய மக்கள் அபிப்பிராயம்

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்
சோஷல் இன்டிகேட்டர்

ஜூலை 2024

## பொருளடக்கம்


அறிமுகம் ........................................................................................................................................................1

முறைமையியல் ..................................................................................................................................................1

முடிவுகளின் சாராம்சம் ......................................................................................................................................2

ஆய்வு முடிவுகள் ..................................................................................................................................................9

பொருளாதார நடவடிக்கைகளுக்கான வாய்ப்புக்கள் ..........................................................................................9

**வரைபு 01:** 15 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த காலத்துடன் ஒப்பிடும்போது, உங்கள் பிரதேசத்தில்/ கிராமத்தில் வாழும் மக்களுக்குக் கிடைக்கும் பொருளாதார வாய்ப்புகளை எவ்வாறு மதிப்பிடுவீர்கள்? - தேசிய மற்றும் இனம்9

**வரைபு 02:** 15 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த காலத்துடன் ஒப்பிடும்போது, உங்கள் பிரதேசத்தில/ கிராமத்தில் வாழும் மக்களுக்குக் கிடைக்கும் பொருளாதார வாய்ப்புகளை எவ்வாறு மதிப்பிடுவீர்கள்? - வயது, பாலினம் மற்றும் பிரதேசம்.......9

**வரைபு 03:** மற்றைய இனச் சமூகங்களுடன் ஒப்பிடுகையில், உங்கள் இனச் சமூகத்திற்கு உங்கள் பிரதேசத்தில்/ கிராமத்தில் கிடைக்கின்ற பொருளாதார வாய்ப்புகளுக்கான அணுகலை எவ்வாறு மதிப்பிடுவீர்கள்? - தேசிய.......10

**வரைபு 04:** மற்றைய இனச் சமூகங்களுடன் ஒப்பிடுகையில், உங்கள் இனச் சமூகத்திற்கு உங்கள் பிரதேசத்தில்/ கிராமத்தில் கிடைக்கின்ற பொருளாதார வாய்ப்புகளுக்கான அணுகலை எவ்வாறு மதிப்பிடுவீர்கள்? - இனம்.......10

**வரைபு 05:** மற்றைய இனச் சமூகங்களுடன் ஒப்பிடுகையில், உங்கள் இனச் சமூகத்திற்கு உங்கள் பிரதேசத்தில்/ கிராமத்தில் கிடைக்கின்ற பொருளாதார வாய்ப்புகளுக்கான அணுகலை எவ்வாறு மதிப்பிடுவீர்கள்? - வயது, பாலினம் மற்றும் பிரதேசம் .......11

**வரைபு 06:** மற்றைய மதச் சமூகங்களுடன் ஒப்பிடுகையில், உங்கள் மதச் சமூகத்திற்கு உங்கள் பிரதேசத்தில்/ கிராமத்தில் கிடைக்கின்ற பொருளாதார வாய்ப்புகளுக்கான அணுகலை எவ்வாறு மதிப்பிடுவீர்கள்? - தேசிய.......11

**அட்டவணை 01:** மற்றைய மதச் சமூகங்களுடன் ஒப்பிடுகையில், உங்கள் மதச் சமூகத்திற்கு உங்கள் பிரதேசத்தில்/ கிராமத்தில் கிடைக்கின்ற பொருளாதார வாய்ப்புகளுக்கான அணுகலை எவ்வாறு மதிப்பிடுவீர்கள்? - மதம்.......12

**வரைபு 07:** மற்றைய மதச் சமூகங்களுடன் ஒப்பிடுகையில், உங்கள் மதச் சமூகத்திற்கு உங்கள் பிரதேசத்தில்/ கிராமத்தில் கிடைக்கின்ற பொருளாதார வாய்ப்புகளுக்கான அணுகலை எவ்வாறு மதிப்பிடுவீர்கள்? - வயது, பாலினம் மற்றும் பிரதேசம் .......12

கல்விக்கான வாய்ப்புக்கள்...........................................................................................................................13

**வரைபு 08:** 15 ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததுடன் ஒப்பிடும்போது, உங்கள் பிரதேசத்தில்/ கிராமத்தில் வசிக்கும் மக்களுக்குக் கிடைக்கும் கல்வி வாய்ப்புகளை எவ்வாறு மதிப்பிடுவீர்கள்? - தேசிய மற்றும் இனம்............13

**வரைபு 09:** 15 ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததுடன் ஒப்பிடும்போது, உங்கள் பிரதேசத்தில்/ கிராமத்தில் வசிக்கும் மக்களுக்குக் கிடைக்கும் கல்வி வாய்ப்புகளை எவ்வாறு மதிப்பிடுவீர்கள்? - வயது, பாலினம் மற்றும் பிரதேசம்.......13

**வரைபு 10:** மற்றைய இனச் சமூகங்களுடன் ஒப்பிடுகையில், உங்கள் இனச் சமூகத்திற்கு உங்கள் பிரதேசத்தில்........14

**வரைபு 11:** மற்றைய இனச் சமூகங்களுடன் ஒப்பிடுகையில், உங்கள் இனச் சமூகத்திற்கு உங்கள் பிரதேசத்தில்/ கிராமத்தில் கிடைக்கின்ற கல்வி வாய்ப்புகளுக்கான அணுகலை எவ்வாறு மதிப்பிடுவீர்கள்? - இனம்.........14

**வரைபு 12:** மற்றைய இனச் சமூகங்களுடன் ஒப்பிடுகையில், உங்கள் இனச் சமூகத்திற்கு உங்கள் பிரதேசத்தில்/ கிராமத்தில் கிடைக்கின்ற கல்வி வாய்ப்புகளுக்கான அணுகலை எவ்வாறு மதிப்பிடுவீர்கள்? - வயது, பாலினம் மற்றும் பிரதேசம்.......15

**வரைபு 13:** மற்றைய மதச் சமூகங்களுடன் ஒப்பிடுகையில், உங்கள் மதச் சமூகத்திற்கு உங்கள் பிரதேசத்தில்/ கிராமத்தில் கிடைக்கின்ற கல்வி வாய்ப்புகளுக்கான அணுகலை எவ்வாறு மதிப்பிடுவீர்கள்? - தேசிய .......15

**அட்டவணை 02:** மற்றைய மதச் சமூகங்களுடன் ஒப்பிடுகையில், உங்கள் மதச் சமூகத்திற்கு உங்கள் பிரதேசத்தில்/ கிராமத்தில் கிடைக்கின்ற கல்வி வாய்ப்புகளுக்கான அணுகலை எவ்வாறு மதிப்பிடுவீர்கள்? - மதம் .........16

**வரைபு 14:** மற்றைய மதச் சமூகங்களுடன் ஒப்பிடுகையில், உங்கள் மதச் சமூகத்திற்கு உங்கள் பிரதேசத்தில்/ கிராமத்தில் கிடைக்கின்ற கல்வி வாய்ப்புகளுக்கான அணுகலை எவ்வாறு மதிப்பிடுவீர்கள்? - வயது, பாலினம் மற்றும் பிரதேசம்.......16

பாதுகாப்பு / பாதுகாப்பின்மை தொடர்பான உணர்வு....................17

**வரைபு 15:** அன்றாட நடவடிக்கைகள், மதச் சடங்குகள்/ மதச் செயற்பாடுகள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற போது பாதுகாப்பை உணர்தல் - தேசிய ....................17

**வரைபு 16:** அன்றாட நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற போது பாதுகாப்பாக உணர்தல் - இனம் ....................17

**வரைபு 17:** அன்றாட நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற போது பாதுகாப்பாக உணர்தல் - வயது, பாலினம் மற்றும் பிரதேசம்....................18

**அட்டவணை 03:** நீங்கள் உங்கள் மதச் சடங்குகள்/ நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற போது பாதுகாப்பாக உணர்தல் - மதம்....................18

**வரைபு 18:** நீங்கள் உங்கள் மதச் சடங்குகள்/ நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற போது பாதுகாப்பாக உணர்தல் - வயது, பாலினம் மற்றும் பிரதேசம் ....................19

**வரைபு 19:** பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற போது பாதுகாப்பாக உணர்தல் - இனம் ....................19

**வரைபு 20:** பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற போது பாதுகாப்பாக உணர்தல் - வயது, பாலினம் மற்றும் பிரதேசம....................20

**வரைபு 21:** 15 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த நிலைமையுடன் ஒப்பிடும்போது, தற்போதைய ஒட்டுமொத்த பாதுகாப்பு நிலைமை - தேசிய மற்றும் இனம்....................20

**வரைபு 22:** 15 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த நிலைமையுடன் ஒப்பிடும்போது, தற்போதைய ஒட்டுமொத்த பாதுகாப்பு நிலைமை - வயது, பாலினம் மற்றும் பிரதேசம் ....................21

சமூக நம்பிக்கை....................21

**வரைபு 23:** உதவியைப் பெற்றுக்கொள்வது தொடர்பிலான நம்பிக்கையின் அளவு - தேசிய ....................21

**வரைபு 24:** உதவியைப் பெற்றுக்கொள்வது தொடர்பிலான நம்பிக்கையின் அளவு - இனம்....................22

**வரைபு 25:** உதவியைப் பெற்றுக்கொள்வது தொடர்பிலான நம்பிக்கையின் அளவு - வயது....................22

**வரைபு 26:** உதவியைப் பெற்றுக்கொள்வது தொடர்பிலான நம்பிக்கையின் அளவு - பாலினம்....................23

**வரைபு 27:** உதவியைப் பெற்றுக்கொள்வது தொடர்பிலான நம்பிக்கையின் அளவு - பிரதேசம் ....................23

சமூக இடைத்தொடர்பு ....................24

**வரைபு 28:** வேறு இனத்தைச் சேர்ந்தவர்களுடன் தொடர்பு கொள்ளும் அளவு - தேசிய மற்றும் இனம்....................24

**வரைபு 29:** வேறு இனத்தைச் சேர்ந்தவர்களுடன் தொடர்பு கொள்ளும் அளவு - வயது....................24

**வரைபு 30:** வேறு இனத்தைச் சேர்ந்தவர்களுடன் தொடர்பு கொள்ளும் அளவு - பிரதேசம் மற்றும் பாலினம் ....................25

**வரைபு 31:** "எமது கிராமத்தில் உள்ளவர்கள், அரச உத்தியோகத்தர்கள், பொலிஸ் ஆகியோருடன் தொடர்பு கொள்ளும் போது காணப்படும் இன ரீதியான பாகுபாடு பற்றிய அபிப்பிராயம் - தேசிய....................25

**வரைபு 32:** எனது கிராமத்து மக்கள் எனது இனத்தைப் பொருட்படுத்தாமல் அநேகமாக என்னை நல்ல முறையில் நடத்துகின்றார்கள் - இனம் ....................26

**வரைபு 33:** எனது கிராமத்து மக்கள் எனது இனத்தைப் பொருட்படுத்தாமல் அநேகமாக என்னை நல்ல முறையில் நடத்துகின்றார்கள் - வயது, பாலினம் மற்றும் பிரதேசம்....................26

**வரைபு 34:** நான் அரச நிறுவனங்களின் சேவையைப் பெற்று கொள்ளச் செல்லுகையில், எனது இனத்தைப் பொருட்படுத்தாமல் அநேகமாக அவர்கள் என்னை நல்ல முறையில் நடத்துகின்றார்கள் - இனம்....................27

**வரைபு 35:** நான் அரச நிறுவனங்களின் சேவையைப் பெற்று கொள்ளச் செல்லுகையில், எனது இனத்தைப் பொருட்படுத்தாமல் அநேகமாக அவர்கள் என்னை நல்ல முறையில் நடத்துகின்றார்கள் - வயது, பாலினம் மற்றும் பிரதேசம்....................27

**வரைபு 36:** நான் பொலிஸாருடன் உத்தியோகபூர்வ விடயங்களுக்காகத் தொடர்பு கொள்ளும்போது, எனது இனத்தைப் பொருட்படுத்தாமல் அநேகமாக அவர்கள் என்னை நல்ல முறையில் நடத்துகின்றார்கள் - இனம் ....................28

**வரைபு 37:** நான் பொலிஸாருடன் உத்தியோகபூர்வ விடயங்களுக்காகத் தொடர்பு கொள்ளும்போது, எனது இனத்தைப் பொருட்படுத்தாமல் அநேகமாக அவர்கள் என்னை நல்ல முறையில் நடத்துகின்றார்கள் - வயது, பாலினம் மற்றும் பிரதேசம் ....................28

வேறுபட்ட இனக் குழுக்கள் தொடர்பிலான மனப்பாங்கு....................29

**வரைபு 38:** வேறுபட்ட இனக் குழுக்கள் தொடர்பிலான மனப்பாங்கு - தேசிய....................29

**வரைபு 39:** நீங்கள் வசிக்கும் பிரதேசத்தின் அயலவர்களில் அரைவாசிக்கும் மேற்பட்டவர்கள் வேறு இனக் குழுவைச் சேர்ந்தவர்களாக இருக்கின்ற நிலைமை - இனம், வயது, பாலினம் மற்றும் பிரதேசம்....................29

**வரைபு 40:** வேறுபட்ட இன சமூகங்களைச் சேர்ந்த மக்களுடன் சேர்ந்து பணியாற்றுகின்ற நிலைமை - இனம், வயது, பாலினம் மற்றும் பிரதேசம் ....................30

**வரைபு 41:** குடும்பத்தின் நெருங்கிய உறவினர் ஒருவர் வேறு இனத்தைச் சேர்ந்த ஒருவரை திருமணம் செய்து கொள்கின்ற நிலைமை - இனம், வயது, பாலினம் மற்றும் பிரதேசம்....................30

**வரைபு 42:** வெவ்வேறு நிறுவனங்களில் காணப்படும் இன ரீதியான பாகுபாடு - தேசிய....................31

**வரைபு 43:** வெவ்வேறு நிறுவனங்களில் காணப்படும் இன ரீதியான பாகுபாடு - இனம் ....................31

**வரைபு 44:** வெவ்வேறு நிறுவனங்களில் காணப்படும் இன ரீதியான பாகுபாடு - பாலினம் ....................32

**வரைபு 45:** வெவ்வேறு நிறுவனங்களில் காணப்படும் இன ரீதியான பாகுபாடு - வயது....32
**வரைபு 46:** வெவ்வேறு நிறுவனங்களில காணப்படும் இன ரீதியான பாகுபாடு - பிரதேசம்....33
**வரைபு 47:** வெவ்வேறு நிறுவனங்களில் காணப்படும் மத ரீதியான பாகுபாடு - தேசிய....33
**அட்டவணை 04:** வெவ்வேறு நிறுவனங்களில் காணப்படும் மத ரீதியான பாகுபாடு - மதம்....34
**வரைபு 48:** வெவ்வேறு நிறுவனங்களில் காணப்படும் மத ரீதியான பாகுபாடு - பாலினம்....34
**வரைபு 49:** வெவ்வேறு நிறுவனங்களில் காணப்படும் மத ரீதியான பாகுபாடு - வயது....35
**வரைபு 50:** வெவ்வேறு நிறுவனங்களில் காணப்படும் மத ரீதியான பாகுபாடு - பிரதேசம்....35

அரசியல் இடைத்தொடர்பு....36
**வரைபு 51:** இலங்கையில் அனைத்து இன குழுக்களும் சமாதானமாக வாழ எந்தளவிற்கு முடியும் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்? - தேசிய....36
**வரைபு 52:** இலங்கையில் அனைத்து இன குழுக்களும் சமாதானமாக வாழ எந்தளவிற்கு முடியும் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்? - இனம்....36
**வரைபு 53:** இலங்கையில் அனைத்து இன குழுக்களும் சமாதானமாக வாழ எந்தளவிற்கு முடியும் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்? - வயது, பாலினம் மற்றும் பிரதேசம்....37
**வரைபு 54:** இலங்கையில் அனைத்து மதக் குழுக்களும் சமாதானமாக வாழ எந்தளவிற்கு முடியும் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்? - தேசிய....37
**அட்டவணை 05:** இலங்கையில் அனைத்து மதக் குழுக்களும் சமாதானமாக வாழ எந்தளவிற்கு முடியும் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்? - மதம்....38
**வரைபு 55:** இலங்கையில் அனைத்து மதக் குழுக்களும் சமாதானமாக வாழ எந்தளவிற்கு முடியும் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்? - வயது, பாலினம் மற்றும் பிரதேசம்....38

அரசியல் தலைமைத்துவம் மீதான அபிப்பிராயம்....39
**வரைபு 56:** அனைத்து இலங்கையர்களுக்கும் அமைதியான/ சமாதானமான வாழ்வை ஏற்படுத்துவதற்கு எமது தேசிய மட்ட அரசியல் தலைவர்கள் எந்தளவுக்கு நேர்மையாக செயற்படுகின்றனர் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? - தேசிய....39
**வரைபு 57:** அனைத்து இலங்கையர்களுக்கும் அமைதியான/ சமாதானமான வாழ்வை ஏற்படுத்துவதற்கு எமது தேசிய மட்ட அரசியல் தலைவர்கள் எந்தளவுக்கு நேர்மையாக செயற்படுகின்றனர் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? - இனம்....39
**வரைபு 58:** அனைத்து இலங்கையர்களுக்கும் அமைதியான/ சமாதானமான வாழ்வை ஏற்படுத்துவதற்கு எமது தேசிய மட்ட அரசியல் தலைவர்கள் எந்தளவுக்கு நேர்மையாக செயற்படுகின்றனர் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? - வயது, பாலினம் மற்றும் பிரதேசம்....40

மதத் தலைவர்கள் மீதான அபிப்பிராயம்....40
**வரைபு 59:** அனைத்து இலங்கையர்களுக்கும் அமைதியான/ சமாதானமான வாழ்வை ஏற்படுத்துவதற்கு எமது தேசிய மட்ட மதத் தலைவர்கள் எந்தளவுக்கு நேர்மையாக செயற்படுகின்றனர் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? - தேசிய....40
**அட்டவணை 06:** அனைத்து இலங்கையர்களுக்கும் அமைதியான/ சமாதானமான வாழ்வை ஏற்படுத்துவதற்கு எமது தேசிய மட்ட மதத் தலைவர்கள் எந்தளவுக்கு நேர்மையாக செயற்படுகின்றனர் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? - மதம்....41
**வரைபு 60:** அனைத்து இலங்கையர்களுக்கும் அமைதியான/ சமாதானமான வாழ்வை ஏற்படுத்துவதற்கு எமது தேசிய மட்ட மதத் தலைவர்கள் எந்தளவுக்கு நேர்மையாக செயற்படுகின்றனர் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? - வயது, பாலினம் மற்றும் பிரதேசம்....41
**வரைபு 61:** நிறுவனங்கள் மீதான நம்பிக்கை - தேசிய....42
**வரைபு 62:** நிறுவனங்கள் மீதான நம்பிக்கை - இனம்....43
**வரைபு 63:** நிறுவனங்கள் மீதான நம்பிக்கை - பாலினம்....44
**வரைபு 64:** நிறுவனங்கள் மீதான நம்பிக்கை - வயது....45
**வரைபு 65:** நிறுவனங்கள் மீதான நம்பிக்கை - பிரதேசம்....46

ஊடகம் மீதான நம்பிக்கை....47
**வரைபு 66:** ஊடகம் மீதான நம்பிக்கை - தேசிய....47
**வரைபு 67:** ஊடகம் மீதான நம்பிக்கை - இனம்....48
**வரைபு 68:** ஊடகம் மீதான நம்பிக்கை - வயது....49
**வரைபு 69:** ஊடகம் மீதான நம்பிக்கை - பாலினம்....50
**வரைபு 70:** ஊடகம் மீதான நம்பிக்கை - பிரதேசம்....51

மதச்சார்பற்ற அரசியலமைப்பு மீதான அணுகுமுறை....................52
**வரைபு 71:** மதச்சார்பற்ற அரசியலமைப்பு மீதான அணுகுமுறை - தேசிய....................52
**வரைபு 72:** மதச்சார்பற்ற அரசியலமைப்பு மீதான அணுகுமுறை - இனம்....................52
**வரைபு 73:** மதச்சார்பற்ற அரசியலமைப்பு மீதான அணுகுமுறை - பாலினம்....................53
**வரைபு 74:** மதச்சார்பற்ற அரசியலமைப்பு மீதான அணுகுமுறை - வயது....................53
**வரைபு 75:** மதச்சார்பற்ற அரசியலமைப்பு மீதான அணுகுமுறை - பிரதேசம்....................54

நினைவு கூறல் கொள்கை மீதான அணுகுமுறை....................54
**வரைபு 76:** நினைவு கூறல் கொள்கை மீதான அணுகுமுறை - தேசிய....................54
**வரைபு 77:** நினைவு கூறல் கொள்கை மீதான அணுகுமுறை - இனம்....................55
**வரைபு 78:** நினைவு கூறல் கொள்கை மீதான அணுகுமுறை - பாலினம்....................55
**வரைபு 79:** நினைவு கூறல் கொள்கை மீதான அணுகுமுறை - வயது....................56
**வரைபு 80:** நினைவு கூறல் கொள்கை மீதான அணுகுமுறை - பிரதேசம்....................56

மீள்நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்தி மீதான முதலீடு தொடர்பான அணுகுமுறை....................57
**வரைபு 81:** மீள்நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்தி மீதான முதலீடு தொடர்பான அணுகுமுறை - தேசிய....................57
**வரைபு 82:** மீள்நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்தி மீதான முதலீடு தொடர்பான அணுகுமுறை - இனம்....................57
**வரைபு 83:** மீள்நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்தி மீதான முதலீடு தொடர்பான அணுகுமுறை - பாலினம்....................58
**வரைபு 84:** மீள்நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்தி மீதான முதலீடு தொடர்பான அணுகுமுறை - வயது....................58
**வரைபு 85:** மீள்நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்தி மீதான முதலீடு தொடர்பான அணுகுமுறை - பிரதேசம்....................59

தேசிய கீதம் பாடப்படுகின்ற மொழி தொடர்பிலான அணுகுமுறை....................59
**வரைபு 86:** தேசிய கீதம் பாடப்படுகின்ற மொழி தொடர்பிலான அணுகுமுறை - தேசிய....................59
**வரைபு 87:** தேசிய கீதம் பாடப்படுகின்ற மொழி தொடர்பிலான அணுகுமுறை - இனம்....................59
**வரைபு 88:** தேசிய கீதம் பாடப்படுகின்ற மொழி தொடர்பிலான அணுகுமுறை - பாலினம்....................60
**வரைபு 89:** தேசிய கீதம் பாடப்படுகின்ற மொழி தொடர்பிலான அணுகுமுறை - வயது....................60
**வரைபு 90:** தேசிய கீதம் பாடப்படுகின்ற மொழி தொடர்பிலான அணுகுமுறை - பிரதேசம்....................61

மீள்நல்லிணக்கத்துடன் தொடர்பான நிறுவனங்கள்....................61
**வரைபு 91:** உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான சுயாதீன ஆணைக்குழு (TRC) தொடர்பாக அறிந்துவைத்துள்ளமை - தேசிய....................61
**வரைபு 92:** உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான சுயாதீன ஆணைக்குழு (TRC) தொடர்பாக அறிந்துவைத்துள்ளமை - இனம், வயது, பாலினம் மற்றும் பிரதேசம்....................62
**வரைபு 93:** மீள்நல்லிணக்கத்துடன் தொடர்பான நிறுவனங்கள் பற்றி அறிந்துவைத்துள்ளமை - தேசிய....................63
**வரைபு 94:** மீள்நல்லிணக்கத்துடன் தொடர்பான நிறுவனங்கள் பற்றி அறிந்துவைத்துள்ளமை - இனம்....................63
**வரைபு 95:** மீள்நல்லிணக்கத்துடன் தொடர்பான நிறுவனங்கள் பற்றி அறிந்துவைத்துள்ளமை - வயது....................64
**வரைபு 96:** மீள்நல்லிணக்கத்துடன் தொடர்பான நிறுவனங்கள் பற்றி அறிந்துவைத்துள்ளமை - பாலினம்....................64
**வரைபு 97:** மீள்நல்லிணக்கத்துடன் தொடர்பான நிறுவனங்கள் பற்றி அறிந்துவைத்துள்ளமை - பிரதேசம....................65
**வரைபு 98:** மீள்நல்லிணக்கத்துடன் தொடர்பான நிறுவனங்கள் மீதான திருப்தி - தேசிய....................65
**அட்டவணை 07:** மீள்நல்லிணக்கத்துடன் தொடர்பான நிறுவனங்கள் மீதான திருப்தி - இனம்....................66
**அட்டவணை 08:** மீள்நல்லிணக்கத்துடன் தொடர்பான நிறுவனங்கள் மீதான திருப்தி - பாலினம்....................66
**அட்டவணை 09:** மீள்நல்லிணக்கத்துடன் தொடர்பான நிறுவனங்கள் மீதான திருப்தி - வயது....................67
**அட்டவணை 10:** மீள்நல்லிணக்கத்துடன் தொடர்பான நிறுவனங்கள் மீதான திருப்தி - பிரதேசம்....................67

## அறிமுகம்

இவ் அறிக்கையானது மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் கணக்கெடுப்பு ஆய்வுப்பிரிவான சோஷல் இன்டிகேட்டரினால் மேற்கொள்ளப்பட்ட மீள்நல்லிணக்கம் தொடர்பான ஆய்வின் பிரதான முடிவுகளை முன்வைக்கின்றது. இலங்கையின் ஜனநாயகம் மற்றும் மீள்நல்லிணக்கம் ஆகிய விடயக் கருப்பொருள்கள் சார்ந்து பொதுமக்களின் தற்போதைய அபிப்பிராயங்களை அறிந்து கொள்ளும் நோக்கில் இவ் ஆய்வு வடிவமைக்கப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டு இலங்கையில் சிவில் யுத்தம் நிறைவடைந்து 15 ஆண்டுகள் கடந்துவிட்டதை குறித்து நிற்கின்றது. 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்ததிலிருந்து, ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் யுத்தத்தினால் பாதிப்படைந்த சமூகங்களுக்கு இடையில் மீள்நல்லிணக்கத்தினை ஏற்படுத்தும் நோக்கோடு செயற்பட்டு வருவதாக தெரிவிக்கின்றது. அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு மேலதிகமாக, சிவில் சமூக அமைப்புக்களும் நாட்டில் மீள்நல்லிணக்கத்தை மேம்படுத்துவதிலும், நிலையான சமாதானத்தை கொண்டு வருவதிலும் அதிக முன் எடுப்புக்களில் ஈடுபட்டுள்ளது. இவ்வாறான பின்புலத்தில், 30 வருடங்களுக்கு மேலாக இன மோதலினால் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கிடையில் மீள்நல்லிணக்கமானது எவ்வளவு தூரம் அடையப்பட்டுள்ளது என்பதனை பரீட்சிப்பதற்கு மாற்றுக் கொள்கைக்கான நிலையம் - சோஷல் இன்டிகேட்டரினால் இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மீள்நல்லிணக்கமானது இன்னும் முடிவுறாத பணியாக தொடர்கின்ற நிலையில், இந்த ஆய்வானது நிலையான சமாதானம் மற்றும் மீள்நல்லிணக்கத்தின் முக்கியத்துவத்தின் மீது நம்பிக்கை கொண்டுள்ள கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் பல்வேறுபட்ட பங்குதாரர்களின் உண்மையான முயற்சிகளுக்கு இவ் ஆய்வு உந்துதலாக அமையும்.

1999 ஆம் ஆண்டிலிருந்து இலங்கையில் பரந்த மட்டத்தில் சமூக - பொருளாதார விடயங்கள் தொடர்பில் கருத்துக் கணிப்பு ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்ற மாற்று கொள்கைகளுக்கான நிலையத்தின் கணக்கெடுப்பு ஆய்வுப் பிரிவான சோஷல் இன்டிகேட்டர் நிறுவனத்தினால் இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ் கணக்கெடுப்பு ஆய்வுப் குழுவானது கலாநிதி. பிரதீப் பீரிஸ், மா. கிருஷ்ணமூர்த்தி, ரங்கனி ரணசிங்க மற்றும் இஷாரா ஜெயரத்ன ஆகியோர் உள்ளடங்குகின்றனர். அறிக்கை வடிவமைப்பில் கவின் பீரிஸ் மற்றும் சுரேஷ் அமுஹேன உதவினார். மேலும், இவ் கற்கையை மேற்கொள்ள வழங்கிய ஆதரவிற்காக கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து மற்றும் பவானி பொன்சேகா ஆகியோருக்கு சோஷல் இன்டிகேட்டர் நன்றிகளைத் தெரிவிக்கின்றது.

## முறைமையியல்

இந்த கணக்கெடுப்பு ஆய்வானது, நாட்டின் 25 மாவட்டங்களிலும் உள்ள (சிங்களம், தமிழ், மலையகத்தமிழ் மற்றும் முஸ்லிம்) ஆகிய பிரதான நான்கு இனச் சமூகங்களையும் சேர்ந்த 1372 நபர்களுடன் மேற்கொள்ளப்பட்டது. பல்வேறு கட்ட எழுமாற்று முறையை பயன்படுத்தி பதிலளிப்பவர்கள் தெரிவு செய்யப்பட்டதுடன், பகுதியளவில் கட்டமைக்கப்பட்ட கேள்விக்கொத்தைப் பயன்படுத்தி ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வில் பிரதான நான்கு இனச் சமூகங்களைச் சேர்ந்த 74 வெளிக்கள கணக்கெடுப்பாளர்கள் (ஆண் மற்றும் பெண்) பங்குபற்றியதோடு, கணக்கெடுப்புக்கான வெளிக்களப்பணியானது 2024 பிப்ரவரி 19ஆம் திகதி முதல் மார்ச் 13ஆம் திகதி வரை மேற்கொள்ளப்பட்டது. மக்களின் மாவட்ட மற்றும் இன ரீதியான உண்மையான விகிதாசாரத்தைப் பிரதிபலிக்கும் வகையில் தரவுத் தொகுப்பு நிறையேற்றப்பட்டது. சமூக விஞ்ஞானத்திற்கான புள்ளியியல் தொகுப்பைப் (SPSS) பயன்படுத்தி தரவுத் தொகுப்பு பகுப்பாய்வு செய்யப்பட்டது.

# முடிவுகளின் சாராம்சம்

## பொருளாதார நடவடிக்கைகளுக்கான வாய்ப்புக்கள்

- ஏறக்குறைய இலங்கையர்களில் அரைவாசியினர் 15 வருடத்திற்கு முன்பு இருந்ததை விடவும் தற்போது பொருளாதார வாய்ப்புக்கள் குறைந்துள்ளதென உணர்கின்றனர். இக் கருத்தானது அனைத்து பிரதான இனத்தவர்கள் மத்தியிலும் காணப்படுவதோடு, ஏனைய இன சமூகத்தவர்களை விடவும் தமிழ் சமூகத்தவர் மத்தியில் அதிகளவில் காணப்படுகின்றது. தமிழ் சமூகத்தில் கிட்டத்தட்ட 56% இனரும், சிங்கள சமூகத்தில் 49% இனரும், முஸ்லிம் சமூகத்தில் 47% ஆனவர்களும் 15 ஆண்டுகளுக்கு முன்னிருந்ததை விடவும் குறைவான பொருளாதார வாய்ப்புக்களை அனுபவிப்பதாக குறிப்பிடுகின்றனர். அதேபோல் யுத்த காலத்தில் இளையவராக இருந்தவர்கள் (தற்போது 31 இருந்து 45 வயதினர்கள்) மற்றும் யுத்த காலத்தில் பெரியவராக இருந்தவர்கள் (தற்போது 46 வயதிற்கு மேல்) ஆகியோர் மத்தியிலும் கருத்து அதிகளவில் காணப்படுகின்றது. மேலும், இக் கருத்தானது ஒப்பீட்டளவில் கிராமப்புறத்தைச் சேர்ந்தவர்கள் மற்றும் பெண்கள் ஆகியோரை விடவும் நகர்புறத்தைச் சேர்ந்தவர்கள் மற்றும் ஆண்கள் ஆகியோரிடையே காணக்கூடியதாக உள்ளது.

- ஏனைய இனச் சமூகங்களுடன் ஒப்பிடுகையில் தமது இனச் சமூகத்திற்கு கிடைக்கின்ற பொருளாதார வாய்ப்புகளுக்கான அணுகல் தொடர்பில் மக்கள் என்ன நினைக்கின்றனர் என்று வினவிய போது, இலங்கையர்கள் கலவையான அபிப்பிராயத்தினை முன்வைக்கின்றனர். இருந்தபோதிலும், தமிழ் மற்றும் மலையகத்தமிழ் சமூகங்கள் தமது ஒப்பீட்டளவில் பொருளாதார வாய்ப்புக்கான அணுகல் குறைவாகவே காணப்படுவதாகத் தெளிவாக அடையாளப்படுத்தினர். சிங்கள மற்றும் முஸ்லிம் சமூகங்களின் பெரும்பான்மையானவர்கள் மற்றைய இனச் சமூகங்களின் பொருளாதார வாய்ப்புக்களுக்கான அணுகலோடு ஒப்பிடுகையில் தமக்கு சமனான அல்லது அதிகளவான வாய்ப்புக்கள் உள்ளதாக கருதுகின்றனர்.

- ஏனைய மதச் சமூகங்களுடன் ஒப்பிடுகையில் தமது மதச் சமூகத்திற்கு கிடைக்கின்ற பொருளாதார வாய்ப்புக்களுக்கான அணுகல் தொடர்பில் மக்கள் என்ன நினைக்கின்றனர் என்று வினவிய போது, இலங்கையர்கள் கலவையான அபிப்பிராயத்தினை முன்வைக்கின்றனர். ஏனைய மத குழுக்களுடன் ஒப்பிடுகையில் பௌத்த சமூகத்திற்கு பொருளாதார வாய்ப்புக்களுக்கான அணுகல் சமனான அல்லது அதிகளவாக கொண்டிருப்பதாக தெரிவிக்கின்ற அதே வேளையில், சிறுபான்மை மதச் சமூகங்கள் ஏனைய மத சமூகங்களுடன் ஒப்பிடுகையில், பொருளாதார வாய்ப்புக்களுக்கான அணுகல் அவர்களுக்கு குறைவாகவே காணப்படுவதாகக் கருதுகின்றனர்.

## கல்விக்கான வாய்ப்புக்கள்

- கல்வி வாய்ப்புக்களுக்கான அணுகலை 15 வருடங்களுக்கு முன்னர் இருந்த நிலைமையுடன் ஒப்பிடுமாறு கேட்ட போது, பெரும்பான்மையான இலங்கையர்கள் (79.9%) கல்வி வாய்ப்புக்களுக்கான அணுகல் அதிகமாக உள்ளதாக தெரிவிக்கின்றனர். இந்த அபிப்பிராயமானது அனைத்து இனச் சமூகம், பாலினம், பிரதேசம் மற்றும் அனைத்து வயதுப் பிரிவினரிடையேயும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.
- ஏனைய இனச் சமூகங்களுடன் ஒப்பிடுகையில் தமது இனச் சமூகத்தின் கல்வி வாய்ப்புக்களுக்கான அணுகலை மதிப்பிடுமாறு கேட்ட போது, மலையகத்தமிழ் சமூகத்தை தவிர, ஏனைய சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களின் அதி பெரும்பான்மையானவர்கள் தமக்கு சமமான அல்லது அதிகளவான அணுகல் உள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.
- ஏனைய மத சமூகங்களுடன் ஒப்பிடுகையில் தமது மதச் சமூகத்தின் கல்வி வாய்ப்புக்களுக்கான

அணுகலை மதிப்பிடுமாறு கேட்ட போது, அதி பெரும்பான்மையான பௌத்தர்கள், இந்துக்கள் மற்றும் இஸ்லாமியர்கள் ஏனைய மத சமூகங்களுடன் ஒப்பிடுகையில் தமது சமூகங்களுக்கு சமமான அல்லது அதிகளவான அணுகல் உள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

## பாதுகாப்பு/ பாதுகாப்பின்மை தொடர்பான உணர்வு

- இலங்கையர்களில் அதி பெரும்பான்மையான மக்கள் தமது அன்றாட நடவடிக்கைகள், மதச் சடங்குகள்/ மதச் செயற்பாடுகளில் ஈடுபடுதல் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுதல் தொடர்பில், பாதுகாப்பாக உணர்வதாகக் குறிப்பிடுகின்றனர். இந்த அபிப்பிராயமானது அனைத்து இனச் சமூகங்கள் (சிங்களம், தமிழ், மலையகத்தமிழ், முஸ்லிம்) வயது, பாலினம் மற்றும் பிரதேச பிரிவினரிடையேயும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

- அனைத்து பிரதான மத சமூகத்தைச் சேர்ந்த அதி பெரும்பான்மையானவர்கள் அவர்களின் பிரதேசங்களில் மதச் செயற்பாடுகளில் ஈடுபடுதல் தொடர்பில் பாதுகாப்பாக உணர்வதாக குறிப்பிடுகின்றனர். இந்த அபிப்பிராயமானது அனைத்து வயது, பாலினம் மற்றும் அனைத்து பிரதேசப் பிரிவினரிடையேயும் காணக்கூடியதாக உள்ளது.

- பிரதான இனச் சமூகங்களைச் சேர்ந்த பெரும்பான்மையானவர்கள் அவர்களின் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுதல் தொடர்பில் பாதுகாப்பாக உணர்வதாக குறிப்பிடுகின்றனர். இந்த அபிப்பிராயமானது அனைத்து வயது, பாலினம் மற்றும் பிரதேசப் பிரிவினரிடையேயும், காணக்கூடியதாக உள்ளது.

- தமது குடும்பத்தின் ஒட்டுமொத்த பாதுகாப்பு தொடர்பிலான தற்போதைய நிலைமையை 15 வருடங்களுக்கு முன்பு இருந்த நிலமையுடன் ஒப்பிடுமாறு கேட்ட போது, 40.7% ஆன இலங்கையர்கள் அது முன்னேற்றமடைந்துள்ளதென தெரிவிக்கின்ற அதேவேளையில், 33% ஆனவர்கள் எவ்வித மாற்றங்களும் இல்லை என தெரிவிக்கின்றனர். தமது குடும்பத்தின் தற்போதைய ஒட்டுமொத்த பாதுகாப்பு நிலைமை முன்னேறியுள்ளது என்று தெரிவிப்பவர்களின் அளவு சிறுபான்மை சமூகத்தை சேர்ந்தவர்களிடம் அதிகமாக காணப்படுகின்றது. (தமிழர்கள் - 53.9% மலையகத் தமிழர்கள் - 62.5%, முஸ்லிம்கள் - 50%) மறுதலையாக, சிங்கள சமூகத்தை சேர்ந்தவர்கள் ஒரு கலவையான அபிப்பிராயத்தை வெளிப்படுகின்றனர். (முன்னேற்றம் அடைந்துள்ளது - 36.4%, எந்தவித மாற்றமும் இல்லை - 36.2%, மோசமடைந்துள்ளது - 26.6%).

- யுத்தம் தொடர்பில் எவ்வித அனுபவமும் இல்லாதவர்கள் (18 - 30 வயதுடையவர்கள்) மற்றும் நகர்ப்புறத்தைச் சேர்ந்த பெரும்பான்மையானவர்கள், 15 வருடங்களிற்கு முன்னர் இருந்த நிலைமையுடன் ஒப்பிடும் போது தமது குடும்பத்தின் பாதுகாப்பு நிலைமை முன்னேறியுள்ளதாகக் குறிப்பிடுகின்றனர்.

## சமூக நம்பிக்கை

- அவசர நிலைமையின் போது யாரேனும் ஒருவரின் உதவியை நாடுவது தொடர்பில் எவ்வளவு தூரம் நம்பிக்கையுள்ளது என வினவிய போது, பெரும்பான்மையானவர்கள் தமது அயலவர்கள் அல்லது அவர்களின் அருகில் உள்ள உறவினர்களின் உதவியை நாட விரும்புவதாகக் குறிப்பிடுகின்றனர். இவ் அபிப்பிராயமானது அனைத்து இனச் சமூகங்களில் காணப்படுவதோடு, ஒவ்வொரு இனச் சமூகங்களும் தமது இனச் சமூகத்திடம் உதவியை நாடுவதற்கு அதிகளவான விருப்பத்தை வெளிப்படுத்துகின்றனர்.

## சமூக இடைத்தொடர்பு

- வேறுபட்ட இனத்தவர்களுடன் கொண்டுள்ள இடைத்தொடர்பின் அளவு தொடர்பில் வினவிய போது, இலங்கையர்கள் கலவையான அபிப்பிராயத்தை வெளிப்படுத்துகின்றனர். எனினும், வேறு இனத்தவர்களுடனான இடைத்தொடர்பு குறிப்பிடத்தக்க அளவு அதிகம் உள்ளதாக தெரிவிப்பவர்கள், மலையகத்தமிழர்கள் மற்றும் முஸ்லிம் சமூகத்தினர் ஆகும். வேறு இனத்தவர்களுடனான இடைத்தொடர்பு அதிக அளவில் உள்ளதாக தெரிவிப்பவர்கள் ஒப்பீட்டளவில் ஆண்கள் மற்றும் நகர்புறத்தைச் சேர்ந்தவர்கள் ஆகும்.

- இலங்கையர்களில் ஏறக்குறைய 80% ஆனவர்கள் ''எனது கிராமத்து மக்கள் எனது இனத்தைப் பொருட்படுத்தாமல் அநேகமாக என்னை நல்ல முறையில் நடத்துகின்றார்கள்'' என்ற கருத்தையும், ''நான் அரச நிறுவனங்களின் சேவையைப் பெற்று கொள்ளச் செல்லுகையில், எனது இனத்தைப் பொருட்படுத்தாமல் அநேகமாக அவர்கள் என்னை நல்ல முறையில் நடத்துகின்றார்கள்'' என்பதையும் ஏற்றுக்கொள்கின்றனர். ''நான் பொலிஸாருடன் உத்தியோகபூர்வ விடயங்களுக்காகத் தொடர்பு கொள்ளும்போது, என் இனத்தைப் பொருட்படுத்தாமல் அநேகமாக அவர்கள் என்னை நல்ல முறையில் நடத்துகின்றார்கள்'' என்ற கூற்றை 70% ஆனவர்கள் ஏற்றுக்கொள்கின்றனர்

- ''எனது கிராமத்து மக்கள் எனது இனத்தைப் பொருட்படுத்தாமல் அநேகமாக என்னை நல்ல முறையில் நடத்துகின்றார்கள்'' என்ற கருத்து சிங்களவர்கள் (88.4%), மலையகத்தமிழர்கள் (87.7%) மற்றும் முஸ்லிம் (80.5%) சமூகங்கள் மத்தியில் குறிப்பிடத்தக்க அளவில் அதிகமாக காணப்படுவதுடன், மாறாக, இதே கருத்து தமிழ் சமூகத்தினர் மத்தியில் காணப்படுகின்ற அளவு 51.3% மட்டுமே ஆகும்.

- ''நான் அரச நிறுவனங்களின் சேவையைப் பெற்று கொள்ளச் செல்லுகையில், எனது இனத்தைப் பொருட்படுத்தாமல் அநேகமாக அவர்கள் என்னை நல்ல முறையில் நடத்துகின்றார்கள்.'' என்ற கருத்தை ஏற்றுக்கொள்பவர்கள் சிங்களவர்கள் (80.1%), மலையகத்தமிழர்கள் (85.7%) மற்றும் முஸ்லிம் (80.5%) சமூகங்கள் மத்தியில் ஒப்பீட்டடிப்படையில் அதிகமாக காணப்படுவதற்கு, மாறாக, இதே கருத்தை வெளிப்படுத்தும் தமிழ் சமூகத்தினர் 71.2% ஆனவர்கள் மட்டுமே. மேற்படி கருத்தை ஏற்றுக்கொள்ளாதவர்கள், கிராமப்புறத்தை விட (10.4%) நகர்புறத்தைச் சேர்ந்தவர்கள் (22.9%) அதிகமாகும்.

- ''நான் பொலிஸாருடன் உத்தியோகபூர்வ விடயங்களுக்காகத் தொடர்பு கொள்ளும்போது, என் இனத்தைப் பொருட்படுத்தாமல் அநேகமாக அவர்கள் என்னை நல்ல முறையில் நடத்துகின்றார்கள்'' என்ற கருத்தை ஏற்றுக்கொள்ளும் தமிழ் சமூகத்தினர் 57.8% ஆக இருக்கும் நிலையில், அதே கருத்தைக் கொண்டுள்ள சிங்களம் (69.6%), மலையகத்தமிழர்கள் (66.7%) மற்றும் முஸ்லிம் (71.1%) சமூகத்தவர்கள் ஒப்பீட்டளவில் அதிகமாகும். இந்தக் கருத்தானது, 18 முதல் 45 வயதுப் பிரிவினர் மற்றும் கிராமப்புறத்தைச் சேர்ந்தவர்கள் மத்தியில் சற்று அதிகமாக காணப்படுகின்றது.

## வேறுபட்ட இனக் குழுக்களை தொடர்பிலான மனப்பாங்கு

- ஆய்வில் பதிலளிப்பவர்களுக்கு வேறுபட்ட மூன்று அனுமான நிலைமைகள் முன்வைக்கப்பட்டன. ''நீங்கள் வசிக்கும் பிரதேசத்தின் அயலவர்களில் அரைவாசிக்கும் மேற்பட்டவர்கள் வேறு இனக் குழுவைச் சேர்ந்தவர்களாக இருக்கின்ற நிலைமை'', ''வேறுபட்ட இன சமூகங்களைச் சேர்ந்த மக்களுடன் சேர்ந்து பணியாற்றுகின்ற நிலைமை'' மற்றும் ''குடும்பத்தின் நெருங்கிய உறவினர் ஒருவர் வேறு இனத்தைச் சேர்ந்த ஒருவரை திருமணம் செய்து கொள்கின்ற நிலைமை''. மேற்படி ஒவ்வொரு நிலைமைகளிலும் ஏற்றுக்கொள்கின்ற அளவினை குறிப்பிடுமாறு கேட்கப்பட்டனர்.

இலங்கையர்களில் பெரும்பான்மையானவர்கள் (கிட்டத்தட்ட 80%) ''வேறுபட்ட இன சமூகங்களைச் சேர்ந்த மக்களுடன் சேர்ந்து பணியாற்றுகின்ற நிலைமையை'' ஏற்றுக்கொள்கின்றனர். அதோடு, இலங்கையர்களில் அரைவாசியினர் மட்டுமே ''தாங்கள் வசிக்கும் பிரதேசத்தின் அயலவர்களில் அரைவாசிக்கும் மேற்பட்டவர்கள் வேறு இனக் குழுவைச் சேர்ந்தவர்களாக இருக்கின்ற நிலைமை'' அல்லது ''குடும்பத்தின் நெருங்கிய உறவினர் ஒருவர் வேறு இனத்தைச் சேர்ந்த ஒருவரை திருமணம் செய்து கொள்கின்ற நிலைமை'' போன்ற நிலைமைகள் ஏற்றுக்கொள்கின்றதாக குறிப்பிடுகின்றனர்.

- மலையகத்தமிழ் (59.6%) மற்றும் முஸ்லிம் (67.7%) சமூகத்தினர்களில் அரைவாசிக்கும் மேற்பட்டவர்கள் ''தாங்கள் வசிக்கும் பிரதேசத்தின் அயலவர்களில் அரைவாசிக்கும் மேற்பட்டவர்கள் வேறு இனக் குழுவைச் சேர்ந்தவர்களாக இருக்கின்ற நிலைமையை'' ஏற்றுக்கொள்கின்றனர். அதோடு சிங்கள சமூகத்தின் அரைவாசியினரும் இக் கருத்தை ஏற்றுக்கொள்கின்றனர். எனினும், ஒப்பீட்டளவில் தமிழ் சமூகத்தினரிடையே (39.2%) இக் கருத்தை ஏற்றுக்கொள்பவர்கள் குறைவாக காணப்படுகின்றனர். இந்தக் கருத்தானது, 18 முதல் 45 வயதுப் பிரிவினர் மற்றும் நகரப்புறத்தைச் சேர்ந்தவர்கள் மத்தியில் சற்று அதிகமாக காணப்படுகின்றது.

- 70% இற்கு மேற்பட்ட சிங்கள, மலையகத்தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகத்தவர்கள் ''வேறுபட்ட இன சமூகங்களைச் சேர்ந்த மக்களுடன் சேர்ந்து பணியாற்றுகின்ற நிலைமையை'' ஏற்றுக்கொள்கின்றனர். எனினும், ஒப்பீட்டளவில் தமிழ் சமூகத்தினரிடையே இக் கருத்தை ஏற்றுக்கொள்பவர்கள் குறைவாக காணப்படுகின்றனர் (59.5%). இக் கருத்தானது, ஆண் மற்றும் கிராமப்புறத்தைச் சேர்ந்தவர்கள் மத்தியில் சற்று அதிகமாக காணப்படுகின்றது.

- பெரும்பான்மையான சிங்கள (49.6%) மற்றும் மலையகத்தமிழ் (56.1%) சமூகத்தவர்கள் ''குடும்பத்தின் நெருங்கிய உறவினர் ஒருவர் வேறு இனத்தைச் சேர்ந்த ஒருவரை திருமணம் செய்து கொள்கின்ற நிலைமையை'' ஏற்றுக்கொள்கின்றனர். எனினும் ஒப்பீட்டளவில் தமிழ் (34.4%) மற்றும் முஸ்லிம் (35.2%) சமூகத்தினர்களிடையே இக் கருத்தை ஏற்றுக்கொள்பவர்கள் குறைவாக காணப்படுகின்றனர். 18 முதல் 45 வயதுப் பிரிவினர் மற்றும் ஆண்கள் மத்தியில் இக் கருத்தை ஏற்றுக்கொள்பவர்கள் அதிகமாகும்.

- பெரும்பான்மையான இலங்கையர்கள் கடந்த இரண்டு வருடங்களில் அவர்களின் இனச்சமூக பின்புல அடிப்படையில், பாடசாலை, வேலையிடத்தில், நலன்புரித்திட்ட உதவிகள் பெறுகின்ற போது பொலிஸாருடன் செயல்படும் போது, மற்றும் அயலவர்களுடனான தகராறிற்கு தீர்வு (நீதி/ நியாயத்தை) பெற்றுக் கொள்ள முயற்சியின் போது 'நியாயமற்ற முறையில் நடாத்தப்படவில்லை' என குறிப்பிடுகின்றனர். நலன்புரித்திட்ட உதவிகள் பெறுகின்ற போது நியாயமற்ற முறையில் நடாத்தப்பட்டதாக 9.1% ஆனவர்கள் குறிப்பிடுகின்றதோடு, பொலிஸாருடன் செயல்படும் போது நியாயமற்ற முறையில் நடாத்தப்பட்டதாக 4.2% ஆனவர்கள் குறிப்பிடுகின்றனர்.

- பெரும்பான்மையான இலங்கையர்கள் கடந்த இரண்டு வருடங்களில் அவர்களின் இனச்சமூக பின்புல அடிப்படையில், பாடசாலை, வேலையிடத்தில், நலன்புரித்திட்ட உதவிகள் பெறுகின்ற போது பொலிஸாருடன் செயல்படும் போது, மற்றும் அயலவர்களுடனான தகராறிற்கு தீர்வு (நீதி/ நியாயத்தை) பெற்றுக் கொள்ள முயற்சியின் போது 'நியாயமற்ற முறையில் நடாத்தப்படவில்லை' என குறிப்பிடுகின்றனர். நலன்புரித்திட்ட உதவிகள் பெறுகின்ற போது நியாயமற்ற முறையில் நடாத்தப்பட்டதாக 7.2% ஆனவர்கள் குறிப்பிடுகின்றதோடு, பொலிஸாருடன் செயல்படும் போது நியாயமற்ற முறையில் நடாத்தப்பட்டதாக 3.3% ஆனவர்கள் குறிப்பிடுகின்றனர்.

## அரசியல் இடைத்தொடர்பு

- அனைத்து இன சமூகத்தைச் சேர்ந்தவர்கள் இலங்கையில் சமாதானமாக வாழ முடியும் (89.7%) மற்றும் அனைத்து மத சமூகத்தைச் சேர்ந்தவர்கள் இலங்கையில் சமாதானமாக வாழ முடியும் (89.6%) என்றும் அதி பெரும்பான்மையான இலங்கையர்கள் எண்ணுகின்றனர். இவ் நிலைப்பாட்டினை அனைத்து பிரதான இனச் சமூகங்களிலும் காணப்படுகின்றது.

- இலங்கையர்களில் அதி பெரும்பான்மையானவர்கள், இலங்கையில் அனைத்து இனக் குழுக்களும் ஓரளவு அல்லது பெருமளவு சமாதானமாக வாழ முடியும் என எண்ணுகின்றனர். எனினும், தமிழ் 14% மற்றும் மலையகத்தமிழ் 12% சமூகத்தவர்கள் அனைத்து சமூகங்களும் இலங்கையில் சமாதானமாக வாழ முடியாதென உணர்கின்றனர். யுத்தம் முடிவடைந்து 15 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், இள வயதினராக யுத்தத்தை அனுபவித்த இலங்கையர்கள், பெரியவர்களாக யுத்தத்தை அனுபவித்தவர்களுடன் ஒப்பிடும் போது அனைத்து இனக் குழுக்களும் இலங்கையில் சமாதானமாக வாழ முடியும் என அதிகளவானோர் நினைக்கின்றனர்.

- அனைத்து மத சமூகத்தைச் சேர்ந்த அதி பெரும்பான்மையானவர்கள், பெருமளவு அல்லது ஓரளவு அனைத்து இன சமூகங்களும் இலங்கையில் சமாதானமாக வாழ முடியும் என உணர்கின்றார்கள்.

- யுத்தம் முடிவடைந்து 15 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், இள வயதினராக யுத்தத்தை அனுபவித்த இலங்கையர்கள், பெரியவர்களாக யுத்தத்தை அனுபவித்தவர்களுடன் ஒப்பிடும் போது அனைத்து மதக் குழுக்களும் இலங்கையில் சமாதானமாக வாழ முடியும் என அதிகளவானோர் நினைக்கின்றனர்.

## அரசியல் தலைமைத்துவம் மீதான அபிப்பிராயம்

